**தலைப்பு 410 - நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்டோபர் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக்

காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 21 செலவு விடயங்களுக்கான ஒதுக்கத் தொகையில் ரூபா 1,286,515,040 ஆன தொகையொன்று அதாவது நூற்றுக்கு 7 வீதத்திலிருந்து நூற்றுக்கு | பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டமை, தளபாடம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக கட்டளைகள் வழங்கப்பட்டாலும் சந்தையில் இறக்குமதி கட்டுப்பாடுகள் | திட்டமிடப்பட்ட முழுமயான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 98 வீதத்திற்கு இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | காணப்பட்டமை, அந்நியச் செலவாணிப் பிரச்சினை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக செலவு முகாமைத்துவம், செலவுத் தேவைகள் குறைவடைந்தமையால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | |
| (ஆ) | மூலதன மற்றும் மீண்டெழும் செலவு விடயங்கள் 02 இற்கான ஒதுக்கங்கள் ரூபா 460,000 ஆன முழுத்தொகையும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படாமை, அமைச்சின் புதிய அலுவலக வளாகத்திற்கு கட்டிடம் மற்றும் நிர்மாணப் பராமரிப்புச் செலவுகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாததால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட முழுமயான ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 02 செயற்திட்டங்களில் செலவு விடயங்கள் 2202 - அபிவிருத்தி உதவிக்கான குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 20,000,000 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அச்செலவு விடயங்களில் சேமிப்பு ரூபா 461,391,566 ஆக இருந்த காரணத்தினால் குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. | புதிய அமைச்சாக 2020 ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்டிருந்த இந்த அமைப்பின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு தேவைப்படுகின்ற அலுவலக உபகரணம் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கு போதுமானளவு ஒதுக்கங்கள் 410-1-2-2102 கீழ் ஒதுக்கப்படாததால் ரூபா 8.5 மில்லியன் ஒதுக்கங்கள் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக மேலதிக ஒதுக்கீடு பெறப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு செயற்படுத்தப்படுவதற்காக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 410-2-3-13-2202 ஆகிய விடயத்திற்காக ரூபா 20 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு செலவு விடயங்களுக்காகவும் தேவையான நிதி மதிப்பீடுகள் முடிந்தளவில் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு – iii) காட்டப்படாத ரூபா 160,007 ஆனது இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பொறுப்பொன்று, 2022 ஆம் வருடத்தில் பெப்ரவரி மாதத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் மாத தொலைபேசி பற்றுச்சீட்டுக்கள் தாமதமாகக் கிடைத்தமையால் 2021 நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்படவதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்கான அனைத்துப் பொறுப்புக்களும் அதில் உள்ளடக்கப்படுவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரியால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை முறையாகச் செயற்படுத்துவதற்காக பயனுள்ள முறைகள் காணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியுள்ள போதிலும், அத் தேவைப்பாட்டின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் காணப்படுகின்ற உள்ளக கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்காக SMTR/2/T&R/12/Vacancies ஆம் இலக்க மற்றும் 2021.07.22, 2021.09.14, 2021.10.28 மற்றும் 2022.02.03 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய இறப்பர் தோட்டங்களில் வருமானத்தைப் பன்முகப்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் அக்காணிகளை இலாபகரமான வணிக அலகுகளாக மாற்றுவதற்கான அபிவிருத்தி செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, 2021 திசெம்பர் 31 இல் எதிர்பார்த்த முன்னேற்றம் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அடையப்பட்ட பௌதீக முன்னேற்றத்திற்கும் இடையே திருப்தியற்ற முரணொன்று அவதானிக்கப்பட்டது. | வருட இறுதியின் போது மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலையை விட அதிகமாக நிர்மாணப் பொருட்கள் விலை உயர்வடைந்தமை, சில செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களை சேமிப்பில் வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் விலை மனுக் கோரப்பட்ட போது ஒதுக்கப்பட்ட தொகையை விட மனுக்களின் விலைகள் அதிகரித்தமை, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் அனைவருக்குமான பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமை, விவசாயிகளுக்குத் தேனீ வளர்ப்பு கலைகளை கொள்வனவு செய்வதில் சிரமம். செயற்திட்டங்களுக்கான அங்கீகாரம் தாமதமாகி கிரடைத்தமை, தேவையான சீமெந்து, கட்டைக்கற்கள், மற்றும் கம்பிகள் போன்ற கட்டிடப் பொருட்களை சந்தையிலிருந்து வாங்குவதில் சிரமம் போன்ற விடயங்கள் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் பௌதீக இலக்கு மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக பெறப்பட்ட பௌதீக முன்னேற்றம் என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டன. | திட்டமிடப்பட்ட இலக்குகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட நடவடிக்கைகள் எல்லை வரைபடங்கள் தயாரித்தல் போன்ற 18 அபிவிருத்திச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய அனைத்து பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுஇதன் பிரகாரம் அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் நூற்றுக்கு நூறு நிதி முன்னேற்றம் காட்டப்பட்டு 10 அபிவிருத்தித் திட்டங்களும், நூற்றுக்கு நூறு நிதி முன்னேற்றமொன்று அடைந்து கொள்வதற்கு தவறிய 7 செயற்திட்டங்களும் காணப்பட்டதுடன், தேயிலை பயிர்ச் செய்கைக்காக சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் எவ்வித நிதி முன்னேற்றமொன்றும் இல்லாத செயற்திட்டமொன்றாக காணப்பட்டது. | காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கு தேயிலைத் தோட்டங்களில் உயர் மற்றும் நடுத்தர நிழல்தரும் தாவரங்களை விரிவுபடுத்தல், செயற்திட்டத்தில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு மொத்தக் கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டமை.<br><br>களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை புதிய தொழில்நுட்பத்திற்குத் மாற்றியமைத்தல் செயற்திட்டத்தில் தேவையான உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை முறைமையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த விலையை விட அதிகமான ரூபா மதிப்புக் குறைவடைந்தமையால் பெறப்பட்ட விலைகள் அதிகரித்தமை காரணமாக இந்த உபகரணங்கள் கொள்வனவு அதிகரித்தமை காரணமாக இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட முடியாதிருந்தது. மீண்டும் விலைமனுக் கோரப்படுவதற்கு காலம் போதியளவு இல்லாமை காரணமாக இச்செயற்திட்டத்தின் தொகை சேமிக்கப்பட்டது.<br><br>சிறிய இறப்பர் தோட்டங்களில சிறிய இறப்பர் தோட்டங்களில் வருமானத்தைப் பன்முகப்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் அக்காணிகளை இலாபகரமான வணிக அலகுகளாக மாற்றுவதற்கான அபிவிருத்திச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது தேவையான வீடுகளை தயார் செய்வதற்கான சீமெந்து, | திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட அபிவிருத்தி திட்டங்கள் பூரணப்படுத்தப் படல் வேண்டும். |

கட்டைக் கற்கள், மற்றும் கம்பி போன்ற கட்டிடப் பொருட்களை சந்தையிலிருந்து வாங்குவதற்கு சிரமமாக இருந்தமை, விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு குடியிருப்புக்களை வழங்குவதில் சிரமம், பயனாளிகளுக்கான பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமை, பல்நோக்கு வெட்டும் இயந்திரங்கள் இல்லாமல் பணிபுரிதல், கொவிட் தொற்றுநோய் நிலைமையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாமை, களப் பிரயாணங்கள் ஏற்பாடு செய்யப்படாமை போன்ற காரணங்கள் சேமிப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கு இயற்கை இறப்பர் தொடர்பான கைத்தொழிலுக்காக உதவித்தொகை வழங்குதல் செயற்திட்டத்தில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தயாரிக்கப்பட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தமை மற்றும் சந்தையில் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வடைந்தமை, மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் மூலப்பொருள் உபகரணங்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன.

தேயிலை பயிர்ச்செய்கைக்கான சொட்டுநீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்தில் நாட்டில் பரவிய கொரோனா நிலைமை மற்றும் வருமான ஆதாரங்கள் பலவீனமடைந்து வருவதால் பெருமளவு பயனாளிகள் இத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்யவில்லை. இறக்குமதிக்

கட்டுப்பாடுகள் காரணமாக நீர் மோட்டார் மற்றும் நீர் குழாய்களுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களுக்கு அந்த உபகரணங்களை வழங்குவதற்கு முடியாதென அறிவிக்கப்பட்டதால் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

இறப்பர் பிரதான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்தில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையால் களப் பரிசோதனைகள் தாமதமாகியதால், வளரும் பருவத்தில் தேவையான விதைகளை வாங்குவதற்கு முடியாதிருந்தமை, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் இறப்பர் ஏலம் நடாத்தி முடியாதிருந்தமையால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. மேலும் பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டமையால் மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10 மில்லியனில் ரூபா 4.2 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

கேகாலை மற்றும் காலிப் பிரதேச அலுவலக நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் கட்டிட திருத்த நடவடிக்கைகள் ரூபா 49 மில்லியனில் முடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதால் ரூபா 21 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

பிரதேச பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் கட்டுப்பாட்டில் உள்ள தோட்டக் காணிகளை கடாஸ்ட்டில் அளவீடு செய்து

| | | |
|---|---|---|
| | எல்லை வரபடங்களை தயாரிக்கும் செயற்திட்டத்தில் 2021 ஆம் ஆண்டில் அளவீடு செய்யப்பட்ட தோட்டங்களில் மின்கம்பங்களை நடுவதற்கு ரூபா 90 மில்லியன் ஆன தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது அளவிடப்பட்ட 130 தோட்டங்களுக்கான எல்லைக் கம்பங்களை உற்பத்தி செய்தல் மற்றும் கொண்டு செல்வதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மூலம் தொடர்பான வரித் தொகை உட்பட ரூபா 269.8 மில்லியன் ஆன செலவு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி பணிகள் பிரதேச மட்டத்தில் பிரதேச பெருந்தோட்டக் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டதாக 2021.09.22 ஆந் திகதிய மற்றும் அமப/21/1499/326/035 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி பணிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 90 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 அரசிற்குச் சொந்தமான தோட்டக் காணிகளை உள்ளூர் தோட்ட நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளால் அறவிடப்பட வேண்டிய 2021 ஆம் ஆண்டின் வருடாந்த குத்தகை வருமானம் ரூபா 1,082,869,913 ஆக இருந்ததுடன், 2021 ஆம் ஆண்டிற்காகச் சேகரிக்கப்பட்ட | 2021 திசெம்பர் 31 இல் ஹபுகஸ்தென்ன தவணையொன்று, பலாங்கொடை தவணையொன்று, பொகவந்தலாவ இரு தவணைகள், களணிவெளி | பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து விரைவில் குறிப்பிட்ட குத்தகைத் தொகை |

| | | |
|---|---|---|
| குத்தகை வருமானம் ரூபா 769,912,476 அகும். அது 2021 ஆம் ஆண்டில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட குத்தகை வருமானத்தில் 71 சதவீதம் ஆகும். 2021 ஆம் ஆண்டிற்கான 09 பெருந்தோட்டக் கம்பனிகளால் செலுத்த வேண்டிய நிலுவைக் குத்தகைத் தொகை ரூபா 312,957,437 ஆகும். கொட்டக்கல பெருந்தோட்ட கம்பனி மற்றும் மஸ்கெலிய பெருந்தோட்டக் கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வருடாந்த குத்தகைக் கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூபா 143,195,155 ஆகும். அப்பெறுமதி 2021 ஆம் ஆண்டிற்கு அறவிடப்பட வேண்டிய வருடாந்த மொத்தக் குத்தகைத் தொகையில் 46 சதவீதமான மதிப்பாகும். | தவணையொன்று, சிலாபம் மூன்று தவணைகள் மற்றும் மதுரட்ட தவணையொன்றுமாக நிலுவையாக உள்ளன. 2022 யூன் 30 திகதியில் பெருந்தோட்டக் கம்பனிகளிடம் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனியால் 2021 ஆம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகையில் ரூபா 22,284,630 ஆன தொகையொன்று அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மிகுதி நிலுவைக் குத்தகையை தொகையை செலுத்துமாறு மஸ்கெலியன பெருந்தோட்டக் கம்பனிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | அனைத்தும் அறவிடப்படுவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் குறைந்தபட்ச பெறுவனவுகள் எல்லை ரூபா 5,000,000 ஆக அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அது ரூபா 1,800,000 ஆக திருத்தப்பட்டிருந்த போதிலும் அது திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் திறைசேரிக் கணனி அச்சீட்டுக் குறிப்புக்களில் (SA-52) இன்னும் அது ரூபா 5,000,000 ஆகக் காணப்பட்டது. | எதிர்பார்த்த முறையில் கடன்தொகை கோரப்படாமையால் நி.பி 503 இன் பிரகாரம் பெறுவனவு எல்லை ரூபா 1,800,000 ஆகத் திருத்தியமைப்பதற்கு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படும். | திறைசேரிக் கணனி அச்சீட்டுக் குறிப்புக்கள் (SA-52) திருத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய தேயிலைத் தோட்ட | இச்செயற்திட்டத்திற்கான | விரைவில் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகார சபையில் செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி / குறைந்த வருமானம் பெறுகின்ற இரண்டு இலட்சம் குடும்பங்களை மையமாகக் கொண்ட முழுமையான குடும்பக் குடியிருப்பு பொருளாதார முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் பயன்கள் வழங்கப்பட்ட 1000 பயனாளிகள் இருப்பதாக அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த செயல்முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு நூறு எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் பராமரிக்கப்பட்ட கோவைகளில் செயற்திட்டத்தின் மூலம் பயன்களைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் பெயர், முகவரி என்பன உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயனாளிகளின் பெயர் பதிவேடு சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரப்பட்டிருந்த போதிலும், பூரணப்படுத்தப்பட்ட பதிவேடு இதுவரை கிடைக்கவில்லை. அப்பதிவேடு வழங்கப்பட்ட பின்னர் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுமென்பதை தயவுடன் பதிவேடு வழங்கப்பட்ட பின்னர் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | தகவல்கள் பெறப்பட்டு குறிப்பிட்ட கோவைகள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | பிரதேச பெருந்தோட்டக் கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் நிலுவை குத்தகைக் கட்டணம் ரூபா 886,412,194 ஆக அவதானிக்கப்பட்டதுடன் 2021 கொடகல பெருந்தோட்டக் கம்பனி மற்றும் குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியால் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைக் கட்டணத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 662,476,865 ஆகும். அத்தொகை அறவிட வேண்டிய மொத்த மீதியில் 75 சதவீத ஆகும். அந்நிலுவை அறவிடப்படுவதற்காக பயனுள்ள நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி 100% அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனி என்பதால் நிலுவைக் குத்தகைத் தொகை அறவிடப்படுவது தொடர்பாக கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டியுள்ளது. கொட்டகல பெருந்தோட்டக் கம்பனியிடம் நிலுவைக் குத்தகைத் தொகை அறவிடுவதற்காக சட்டமா அதிபருக்கு குறிப்பிடப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு குத்தகைதாரரான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு 2021.08.04 அன்று எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2022.04.05 மற்றும் 2022.08.29 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அவற்றின் முன்னேற்றம் விசாரிக்கப்பட்டுள்ளது. | பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து விரைவில் உரிய குத்தகைப் பணம் அனைத்தும் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண்ககாய்வு சட்டத்தின் 40(1) பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடம் காணப்படுகின்ற உள்ளக கணக்காய்வாளர் பதவியை நிரப்புமாறு SMTR/2/T&R/12/Vacancies ஆம் இலக்க மற்றும் 2021.07.22, 2021.09.14, 2021.10.28 மற்றும் 2022.02.03 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டாலும் உள்ளக கணக்காய்வாளர் பதவி நிரப்பப்படவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதிய DMA/AMC/M/2021/2 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் வருடத்தில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்கான ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டமொன்று மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | இந்த இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னர் இதுவரை உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்படாததுடன், நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இன்னும் அந்த உள்ளகக் கணக்காய்வுப் பணியை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்படல் வேண்டும். |